# உங்கள் வழிகாட்டி:

## அனுகூலங்கள், சேவைகள் மற்றும் பொறுப்புகள்

**தொழிலாளர் பதிப்பு**



wsib cspaat ONTARIO

பணியிடப் பாதுகாப்பு மற்றும்
காப்புறுதிச் சபை

# இந்த வழிகாட்டியைப் பற்றி

பணி-தொடர்பாக ஏற்பட்ட காயம் அல்லது நோய்க்குரிய அனுகூலங்கள், இழப்பீடுகள் மற்றும் பணிக்கு-மீண்டும்-திரும்பிச் செல்வதற்கான சேவைகள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் WSIB உங்களுக்கு சேவை புரிந்து வருகின்றது. பணியினால் எவரும் பாதிப்படையக் கூடாது, ஆனால் அப்படி உங்களுக்கு நேர்ந்தால், நீங்கள் உடல்நலம் தேறிப் பாதுகாப்பாக மறுபடியும் பணிக்குத் திரும்பிச் செல்வதற்கு வேண்டிய பராமரிப்பையும் ஆதரவையும் நாம் உங்களுக்கு வழங்குவோம்,.

இந்த வழிகாட்டியில் நாம் வழங்கும் அனுகூலங்கள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்கள் உள்ளன. இதில் மருத்துவப் பராமரிப்பு, வருமான இழப்பீடு மற்றும் பணிக்கு-மீண்டும்-திரும்பிச் செல்வதற்குத் துணை புரியும் சேவைகள் ஆகியன அடங்கும். அத்துடன் ஒரு கோரிக்கையை நீங்கள் சமர்ப்பித்த பிறகு, முடிவு-எடுக்கும் செயன்முறை மற்றும் உங்களுடைய பொறுப்புகள் குறித்த தகவலும் இதில் உள்ளது.

உங்களுக்குரிய ஒவ்வொரு அனுகூலத்தையும், சேவையையும் பொறுப்பையும் பற்றி இங்கு குறிப்பிடவில்லை. WSIB பற்றிப் பலருக்கும் இருக்கும் பொதுவான கேள்விகளின் சுருக்கம் தான் இது. WSIB யின் தீர்ப்புகள் இந்த ஆவணத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதில்லை. அவை பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்புறுதிச் சட்டத்துடன் (WSIA) எமது கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்டவை. உங்கள் கோரிக்கை பற்றிய முடிவுகளை எடுக்கும்போதெல்லாம், உங்களிடமிருந்தும், உங்கள் தொழில் வழங்குனர் மற்றும் உங்கள் உடல்நலப் பராமரிப்பாளர் ஆகியோரிடம் இருந்தும் பெறும் தகவல்களை நாம் எப்போதும் கருத்திற் கொள்கின்றோம்.

# அனுகூலங்கள் மற்றும் சேவைகள் | நாம் எவ்வாறு உங்களுக்கு உதவக்கூடும்?

தகைமையுள்ள கோரிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின்னர் பின்வரும் அனுகூலங்கள் மற்றும் சேவைகளை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். வேலை நேரத்தை நீங்கள் இழக்காதிருந்தாலும் கூட உடல்நலப் பராமரிப்பு உங்களுக்குக் கிட்டக்கூடும்.

## உடல்நலப் பராமரிப்பு

**பணி-தொடர்பாக ஏற்பட்ட காயம் அல்லது நோய் ஒன்றின் பின்னர் நீங்கள் உடல்நலம் தேறுவதில் உதவி புரிவதற்காகவே நாம் இங்கு இருக்கின்றோம். உங்களுக்கு வேறு காப்புறுதிப் பாதுகாப்பு இருந்தாலும், உங்கள் கோரிக்கையுடன் தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட அனைத்து மருத்துவ செலவுகளுக்கான கட்டணங்களையும் நாம் வழங்குவோம். நீங்கள் பெறக்கூடிய அனுகூலங்களின் வகையானது உங்கள் உடல்நிலையின் தன்மை மற்றும் அதன் கடுமை ஆகியவற்றைச் சார்ந்துள்ளது.**

---

**உடல்நலப் பராமரிப்பு அனுகூலங்கள்**







- உடல்நலப் பராமரிப்பு அனுகூலங்களில் உள்ளடங்குவன:
  - உங்கள் உடல்நலப் பராமரிப்பாளரிடம் இருந்து (உ+ம் மருத்துவர், பல் மருத்துவர்) பெறும் சிகிச்சை
  - அவசர சிகிச்சை மற்றும் சத்திர சிகிச்சை உட்பட்ட சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் தங்கியிருத்தல்
  - பரிந்துரைக்கப்படும் மருந்துகள்
  - புரோஸ்டெடிக்ஸ், அல்லது ஆர்தோடிக்ஸ்
  - பிரயாணம் மற்றும் தங்குமிடம் போன்றவற்றுக்குரிய நியாயமான செலவுகள்
  - கடுமையாகப் பாதிக்கப்படும் தொழிலாளர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு உதவும் ஊழியர்கள் அல்லது வேறு நடவடிக்கைகள்
- பெரும்பாலான உடல்நலப் பராமரிப்புச் சிகிச்சைகள் மற்றும் அவை தொடர்பான பிரயாணம் ஆகியவற்றுக்கு WSIB யின் முன்-அங்கீகாரம் தேவைப்படும்.
- WSIB உங்கள் உடல்நலப் பராமரிப்பாளர்களுக்கு நேரடியாகவே சேவைகளை வழங்கலாம். உங்கள் பணி-தொடர்பான காயம் அல்லது நோய்க்கான எந்தவொரு சேவைக்கும் உடல்நலப் பராமரிப்பாளர் ஒருவருக்கு நீங்கள் பணம் கொடுக்கத் தேவையில்லை
- உங்கள் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப் படாவிடின், நீங்கள் மருத்துவப் பராமரிப்புக்காகப் பணம் செலுத்த வேண்டும், பின்னர் அதனை மீளப்பெறுவதற்கு WSIB யிடம் விண்ணப்பிக்க வேண்டும். மருத்துவப் பராமரிப்புகள் அனைத்தும் அங்கீகரிக்கப்படுவதில்லை அங்கீகரிக்கப்பட்ட கோரிக்கைகள் மட்டுமே பணத்தை மீளப்பெறுவதற்குத் தகுதியுடையவை.

---

**மருத்துவப் பராமரிப்பு உபகரணங்கள் மற்றும் பொருட்கள்**



- அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பராமரிப்பு உபகரணங்களுக்குரிய கட்டணங்களை WSIB வழங்குகின்றது. இவற்றுள் அடங்குவன:
  - திறனுதவிச் சாதனங்கள் (உ+மாக வாக்கர்ஸ்)
  - இழுத்துக் கட்டும் ப்ரேஸ்கள் மற்றும் துணை சாதனங்கள்
  - பிற மருத்துவப் பொருட்கள் (உ+மாக காயத்தைப் பராமரிப்பதற்கான பொருட்கள்)
  - மாற்றியமைக்கக் கூடிய படுக்கைச் சட்ட பிரேம்கள் மற்றும் மெத்தைகள்
- உடல்நலப் பராமரிப்பு சாதனங்களின் அங்கீகரிக்கப்பட்ட வழங்குனர்களைப் பற்றிய தெரிவுகள் உங்களுக்கு வழங்கப்படும்.

---

## மீண்டும்-பணிக்குத்-திரும்புவதற்கு உதவும் (RTW) சேவைகள்

**நீங்கள் மீண்டும் பணிக்குத் திரும்புவதற்கான தீர்வுகளை நீங்களும் உங்கள் தொழில் வழங்குனரும் கண்டுபிடிப்பதனை ஆதரிப்பதற்கு நாம் உங்களுக்கு உதவுவோம்.**

---

**மீண்டும்-பணிக்குத்-திரும்புவதற்குரிய சேவைகள்**



- உங்களுக்குத் தேவைப்படும் சகல வசதிகளையும் கொண்ட பொருத்தமான மற்றும் கிடைக்கக்கூடிய பணிக்கு நீங்கள் திரும்புவது பற்றி உரையாடுவதற்கு உங்களையும் உங்கள் தொழில் வழங்குனரையும் RTW பணியாளர்கள் சந்திப்பர்.
- உங்களுக்குப் பொருத்தமாக இருக்கும் வேலை வகைகளைத் தீர்மானிக்க உதவுவதற்காக ஒரு தொழிற்கல்வி மதிப்பீட்டிற்கு நீங்கள் பரிந்துரைக்கப்படலாம்.
- சில சந்தர்ப்பங்களில், உங்களுடைய தற்போதைய தொழில் வழங்குனரிடம் அல்லது ஒரு புதிய தொழில் வழங்குனரிடம் பணிக்குத் திரும்பிச்செல்ல உங்களுக்கு உதவும் திறன்களை வளர்ப்பதற்கான மறு-பயிற்சித் திட்டத்தை நாங்கள் பரிந்துரைக்கலாம் (தேவைப்படுமிடத்து)..

---

## வருமான மாற்றீடு

**உங்கள் வேலை-தொடர்பான காயம் அல்லது நோய் காரணமாகக் குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு வருமானத்தை நீங்கள் இழக்க நேரிட்டால், அதற்குரிய வருமான இழப்பீட்டு அனுகூலங்களை WSIB வழங்கும்.**

---

**வருமான இழப்பு (LOE)**



- வேலை-தொடர்பான காயம் அல்லது நோயின் காரணமாக நீங்கள் வேலை செய்ய முடியாது அல்லது குறைந்த ஊதியம் கிடைக்கும் ஓர் வேலைக்கு மட்டுமே நீங்கள் பாதுகாப்பாகத் திரும்ப முடியும் என உறுதிப்படுத்தப்பட்டால், நீங்கள் காயப்படும்-முன்னர் ஈட்டிய நிகர ஊதியத்தின் 85 சதவீதத்தினை நாம் வழங்கக்கூடும்..
- ஒரு வருடத்திற்கு நீங்கள் பெறக்கூடிய அதிகபட்ச LOE நன்மைகளுக்கு ஒரு வரையறை உள்ளது. உங்கள் கோரிக்கை மேலாளர் இந்த விவரங்களை உங்களுக்கு வழங்க முடியும்.

---

**ஓய்வூதிய வருமான இழப்பு (LRI)**



- LRI நன்மைக்காகத் தகுதி பெறுவதற்கு நீங்கள்:
  - காயம் அல்லது நோய் ஏற்படும் போது 64 வயதிற்குக் குறைந்தவராக இருந்திருக்க வேண்டும்; மற்றும்
  - குறைந்தது 12 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக LOE அனுகூலங்களைப் பெற்றிருக்க வேண்டும்.
- தகுதியுடையவராயின், இழந்த ஓய்வூதிய வருமானத்தை WSIB உங்களுக்கு ஈடு செய்யக்கூடும். உங்கள் LOE இலிருந்து குறிப்பிட்ட ஒரு தொகையை உங்கள் LRI க்கு ஒதுக்கி வைப்பதற்கு நீங்கள் தீர்மானிக்கலாம்.
- 65 வயதை எட்டும் போது, LRI அனுகூலங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படலாம்.

---

## ஏனைய அனுகூலங்கள்

**நீங்களும் உங்களைச் சார்ந்து வாழ்ந்தவர்கள் எவரும் நிரந்தர-ஊனத்தினால் ஏற்படும் இழப்புக்கும் (NEL) அத்துடன் தொடர்ந்து வாழ்பவருக்கும் உரிய அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**

**நிரந்தர-ஊனத்தினால் ஏற்படும் இழப்பு (NEL)**



- உங்களுடைய வேலை-தொடர்பான காயம் அல்லது நோய் காரணமாக நிரந்தரமான ஊறுபாடு ஒன்று ஏற்பட்டால், உடற்பாதிப்பு, செயற்பாடு அல்லது உளவியல் இழப்புகளுக்காக உங்களுக்கு இழப்பீடு தரப்படலாம்.
- உங்கள் இழப்பீட்டுத் தொகை உங்களுடைய குறைபாட்டின் அளவையும் வயதையும் அடிப்படையாகக் கொண்டது.
- குறைபாட்டின் நிலையைத் தீர்மானிக்க WSIB யினால் அங்கீகரிக்கப்பட்ட உடல்நலப் பராமரிப்பாளர் ஒருவரினால் பரிசோதிக்கப்படுவதற்கு நீங்கள் கோரப்படலாம்
- உங்களுடைய பரிசோதனைக்குச் செல்வதற்குரிய எந்தவொரு பயணச் செலவையும் அல்லது அதனால் இழக்கும் ஊதியத்தையும் நீங்கள் மீளப் பெற்றுக் கொள்ளலாம்..

**தொடர்ந்து வாழ்பவருக்கு உரிய அனுகூலங்கள்**



- பணி-தொடர்பான காயம் அல்லது நோயின் காரணமாக இறந்துபோகிற தொழிலாளர்களின் வாழ்க்கைத்துணைகள் அல்லது அவரைச் சார்ந்து வாழ்பவர்கள் பின்வருவனவற்றுக்கு உரித்துடையவர்கள் ஆகலாம்:
  - தொடர்ந்து வாழ்பவருக்கு உரிய கொடுப்பனவுகள் (மொத்தத் தொகையாக மற்றும் மாதாந்தமாக )
  - இறுதிக்கிரியை மற்றும் போக்குவரத்துச் செலவுகள்
  - இழப்புத் துயருக்கான ஆலோசனை
  - தொழிலாளராக மீண்டும்-பணிபுரிய முயலும் வாழ்க்கைத் துணைகளுக்கான ஆதரவு

## முடிவினை எடுத்தல்

**உங்கள் கோரிக்கைக் காலம் முழுவதும், உங்களின் உடல்நலம் தேறுவது மற்றும் பாதுகாப்பாக மீண்டும் பணிக்குத் திரும்புவது ஆகியவற்றுக்கு ஆதரவாக நாங்கள் முடிவுகளை எடுப்போம். உங்கள் கோரிக்கைக்கென நியமிக்கப்பட்ட WSIB பணியாளர்(கள்) இந்த செயற்பாட்டில் உங்களையும் உள்ளடக்குவார்கள். நீங்கள் உடல்நலம் தேறும் போதும் மீண்டும் பணிக்குத் திரும்பும்போதும் பின்வரும் தெரிவுகள் உங்களுக்கு இருக்கும்.**

**முடிவுகளை எழுத்தில் பெற்றுக்கொள்ளல்**

எமது முடிவுகளை எழுத்துமூலமாக நாம் விளக்குவதுடன், அந்த முடிவை(களை) எடுத்ததற்கான காரணங்களையும் நாம் அறிவிப்போம். தகைமை மற்றும் உடல்நலப் பராமரிப்பு ஆகியவற்றுக்கான முடிவுகள் உதாரணங்களில் உள்ளடங்கும்.

**உங்கள் கோரிக்கைக் கோப்பினை அணுகுதல்**

உங்கள் கோரிக்கைக் கோப்பின் ஒரு பிரதியைக் கட்டணமின்றிப் பெற்றுக் கொள்ளும் உரித்து உங்களுக்கு உண்டு. நீங்கள் தபாலில் அல்லது தொலைநகல் மூலமாக இதற்கான வேண்டுகோளை எமக்கு எழுத்தில் அனுப்ப வேண்டும். தகவல் சுதந்திரம் மற்றும் தனியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் (FIPPA) கீழ், WSIB யினால் சேகரிக்கப்பட்ட உங்கள் தனிப்பட்ட தகவல்களை அறியும் உரிமை உங்களுக்கு உள்ளது.

**பிரதிநிதி ஒருவரைத் தேர்ந்தெடுத்தல்**



உங்கள் கோரிக்கையின் போது உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த எவரையாவது நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். இது முறைசாராப் பிரதிநிதி ஒருவரை அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரை உள்ளடக்கியதாக இருக்கலாம். உங்களை ஆதரிக்கும் நண்பர் ஒருவர் அல்லது குடும்ப உறுப்பினர் முறைசாராப் பிரதிநிதிகளாக இருக்கலாம், இவர்கள் உங்கள் கோரிக்கை பற்றி வாய்மொழி மூலம் அறிவிப்புகளைப் பெறுவார்கள். அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் வழக்கறிஞர் சமூக சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளவர்கள் அல்லது அந்தச் சட்டத் தேவைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்கள். அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் வாய்மொழி மூலம் அல்லது எழுத்தில் விபரங்களைப் பெறக்கூடும். (உ+மாக உங்கள் கோரிக்கைக் கோப்பின் பிரதிகள்) மற்றும் மேன் முறையீட்டு நடவடிக்கையின் போது அவர்கள் உங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

**மேன் முறையீட்டுத் தீர்ப்புகள்**



உங்கள் கோரிக்கை பற்றிய முடிவுகளை எடுக்கும்போதெல்லாம் கிடைக்கக்கூடிய அனைத்து விபரங்களையும் நாம் கவனமாகக் கருத்திற் கொள்கின்றோம். சில நேரங்களில் புதிய அல்லது தவறுதலாக விடப்பட்ட தகவல்கள் பின்னர் கிடைக்கும் என்பதனையும் அல்லது தகவலின் ஒரு பகுதி மீண்டும் பார்க்கப்பட வேண்டும் என்று நீங்கள் உணரக்கூடும் என்பதனையும் .நாங்கள் புரிந்துகொள்கின்றோம். இப்படியான ஒரு நிலை உங்களுக்கு இருந்தால், முன்னைய முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு நீங்கள் எம்மைக் கேட்கலாம். அதற்குப் பதில் கிடைத்த பின்னரும் கூட உங்களுக்குத் திருப்தி ஏற்படாவிட்டால், நீங்கள் உரிய முறையில் மேன் முறையீடு செய்யலாம். மீண்டும்-வேலைக்குத்-திரும்புதல், பணி மாற்றம் மற்றும் மாற்று வேலை வாய்ப்பு ஆகியவற்றின் முடிவுகளுக்கு எதிராக 30 நாட்களுக்குள்ளும், வேறு முடிவுகளை எதிர்த்து ஆறு மாதங்களுக்குள்ளும் மேன் முறையீடு செய்யப் போவதனை எமக்கு நீங்கள் எழுத்தில் அறிவிக்க வேண்டும். உங்கள் மேன் முறையீடு பற்றி WSIB யினால் எடுக்கப்பட்ட முடிவில் உங்களுக்குத் திருப்தி ஏற்படாவிட்டால், அம் முடிவை மீளாய்வு செய்யுமாறு நீங்கள் பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்புறுதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தைக் (WSIAT) கேட்கலாம். WSIAT என்பது தனிப்பட்ட ரீதியில் சுயாதீனமாக இயங்கும் ஒரு தீர்ப்பாயம் ஆகும்.

# பொறுப்புகள் | உங்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகின்றது?

உங்களுக்குத் தேவையான மருத்துவப் பராமரிப்பு மற்றும் நிதியுதவிகளை இயன்றளவு விரைவில் பெற்றுத்தர நாம் விரும்புகின்றோம். இதனைச் செய்வதற்கு, உங்கள் உதவி தேவை. ஒரு கோரிக்கையை சமர்ப்பிக்கும்போது அல்லது அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் போது சில பொறுப்புகள் உங்களுக்கு உள்ளன.

## தகவல்களைப் பகிர்தல்

**உங்கள் காயம் அல்லது நோய் குறித்து WSIB க்கு அறிவிக்கவும்**




நீங்கள் படிவம் 6 ஐ நிறைவு செய்து WSIB க்கு அனுப்ப வேண்டும். காயம் ஏற்பட்ட ஆறு மாதங்களுக்குள் அல்லது பணி-தொடர்பான நோய் ஒன்று கண்டறியப்பட்ட 6 மாதங்களுக்குள் நீங்கள் உங்கள் கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். நிறைவு செய்யப்பட்ட படிவம் 6 இல்லாமல் உங்கள் காயத்திற்குப் பின்னர் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே வருமான இழப்பீட்டினை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும். உங்கள் படிவம் 6 ஐப் பூர்த்தி செய்து கையொப்பமிட்டு முடிக்கையில், உங்களுக்குச் சிகிச்சை வழங்கிய மருத்துவர்கள் அனைவரையும் உங்களுடைய செயற்பாட்டுத் திறன்களைப் பற்றிய விபரங்களை WSIB மற்றும் உங்களுடைய தொழில் வழங்குனர் ஆகியோருக்குக் கொடுப்பதற்கு நீங்கள் அதிகாரம் வழங்குகின்றீர்கள்.

**உங்கள் காயம் அல்லது நோய் குறித்து உங்கள் தொழில் வழங்குனருக்குச் சொல்லவும்.**

உங்களுடைய உடல்நலம் தேறி நீங்கள் மீண்டும் பணியாற்றத் திரும்புவதற்கு உதவுவதில் உங்கள் தொழில் வழங்குனர் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றார். பணியிடத்தில் உங்களுக்குக் காயம் ஒன்று ஏற்படும்போது உங்கள் தொழில் வழங்குனருக்கு நீங்கள் அது குறித்துச் சொல்ல வேண்டும். பொதுவாகத் தொழில் வழங்குனர்கள் உங்கள் காயம் அல்லது நோய் மற்றும் அதனுடன் தொடர்புடைய மருத்துவப் பராமரிப்பு பற்றிய அடிப்படை விபரங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடும். முடிவு குறித்து நாம் உங்களுக்கு வழங்கும் கடிதங்களில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்களையும் தொழில் வழங்குனர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

**உங்கள் தொழில் வழங்குனரால் கோரப்படும்போது கொடுப்பதற்குப் பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாட்டுத் திறன்கள் பற்றிய படிவத்தைத் தயாராக வைத்திருக்கவும்.**

உங்களுடைய செயற்பாட்டுத் திறன்கள் மற்றும் கட்டுப்பாடுகள் குறித்து உங்கள் தொழில் வழங்குனருக்குச் சொல்வதற்காக, சிகிச்சை வழங்கும் மருத்துவப் பராமரிப்பு நிபுணர்கள் இந்தப் படிவத்தைப் பயன்படுத்துகின்றனர். நீங்கள் பாதுகாப்பாக மீண்டும் பணிக்குத் திரும்புவதற்குத் திட்டமிடும் போது இது முக்கியமானதாகும்..

| | |
|---|---|
| **உங்கள் கோரிக்கையைத் தீர்ப்பதற்குத் தேவையான அனைத்து விபரங்களையும் வழங்கவும்** | உங்கள் காயம் அல்லது நோய் எப்படி ஏற்பட்டது, உங்கள் உடல்நலப் பராமரிப்புத் தகவல்கள் மற்றும் நீங்கள் மீண்டும் பணிக்குத் திரும்புவதைப் பற்றிய தகவல்கள் போன்ற விபரங்களை நாம் உங்களிடம் கேட்கக்கூடும். உங்கள் கோரிக்கை பற்றிய முடிவுகளை எடுப்பதற்கும், உங்கள் உடல்நலம் தேறி மீண்டும் பணிக்குத் திரும்ப உதவுவதற்கும் வேண்டிய எந்தத் தகவலையும் WSIB யுடன் நீங்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும். |
| **சூழ்நிலையுடன் தொடர்புடைய எந்த மாற்றங்களையும் தெரிவித்தல்** | அனுகூலங்கள் மற்றும் சேவைகளுக்குரிய உங்கள் உரித்தினைப் பாதிக்கும் எந்த மாற்றங்களையும் WSIB க்கு நீங்கள் தெரிவிக்க வேண்டும். உங்கள் காயம் அல்லது நோயில் ஏற்படும் மாற்றங்கள், நீங்கள் வேறு வருமானம் (உ+ மாக., இயலாமைக்குரிய அனுகூலங்கள்) பெற்று வருவதாயின் அத்தகவல், அல்லது உங்கள் வேலை முடிவுக்கு வந்திருப்பின் அந்நிலைமை என்பன இதில் உள்ளடங்கக் கூடியன. மாற்றம் நிகழ்ந்த பின்னர் 10 நாட்களுக்குள் அந்த மாற்றத்தை நீங்கள் அறிவிக்க வேண்டும். |

## செயன்முறையில் பங்கேற்றல்

| | |
|---|---|
| **மருத்துவப் பராமரிப்புக்கான சந்திப்புகளுக்கு ஒத்து-உழைத்தல்** | நீங்கள் குணமடைய உதவுவதற்காக, திட்டமிடப்பட்டுள்ள அனைத்து மருத்துவப் பராமரிப்புச் சந்திப்புகள் மற்றும் பரிசோதனைகளில் கலந்து கொள்ள வேண்டும். உங்களுக்குச் சிகிச்சை வழங்கும் மருத்துவப் பராமரிப்பாளரை(களை)த் தெரிவு செய்யும் உரித்து உங்களுக்கு உண்டு. WSIB யினால் அல்லது உங்கள் தொழில் வழங்குனரால் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கான கட்டணம் பெற்றுக்கொண்ட மருத்துவப் பராமரிப்பாளர்களால் பரிசோதிக்கப்படுவதற்கு நீங்கள் கேட்கப்படலாம். |
| **பணிக்கு-மீண்டும்-திரும்புவதற்குரிய திட்டமிடல் நடவடிக்கைகளுக்கு இணைந்து-உழைத்தல்**  | பாதுகாப்பான மற்றும் பொருத்தமான பணிக்குத் திரும்புவதற்கு உங்களுக்கு உதவும் ஒரு திட்டத்தை உருவாக்க WSIB மற்றும் உங்கள் தொழில் வழங்குனருடன் நீங்கள் இணைந்து செயற்பட வேண்டும். உங்கள் உடல்நலம் தேறுதல் மற்றும் செயற்பாட்டுத் திறன்களைப் பற்றி பற்றிய சமீபத்திய தகவல்களை உங்கள் தொழில் வழங்குனருக்கு ஒழுங்காக வழங்கி வருவதுதான் இதன் கருத்தாகும்.<br><br>பணிக்கு-மீண்டும்-திரும்புவதற்குரிய திட்டமிடலின் ஏனைய அம்சங்களுக்கு உதவும் நோக்கில் WSIB யினால் ஒழுங்கு செய்யப்படும் சந்திப்புகளில் பங்கேற்பதனையும் இது கருதுகின்றது. நீங்கள் கடுமையாகக் காயமடைந்ததன் காரணமாக புதிய பணி ஒன்றைக் கருத்திற் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டால், உங்களைப் புதிய வேலைக்குத் தயார் செய்ய உதவும் ஒரு திட்டத்தை உருவாக்க மாற்று வேலைத்திட்ட நிபுணர் ஒருவருடன் மதிப்பீடு ஒன்றில் கலந்து கொள்ளுமாறு நீங்கள் கேட்கப்படுவீர்கள். |

# மேலதிக ஆதாரங்கள் | மேலதிக தகவலை எங்கே கண்டுபிடிக்க முடியும்

உங்கள் கோரிக்கைக்குரிய உங்களுடைய முக்கிய தொடர்பாளர் உங்கள் தகுதித் தீர்ப்பாளர் அல்லது கோரிக்கை மேலாளர் ஆவார். எவரைத் தொடர்பு கொள்வது என உங்களுக்குத் தெரியவில்லையெனில், திங்கள் முதல் வெள்ளி வரை (காலை 7.30 மணி முதல் மாலை 5:00 மணி வரை) நீங்கள் எம்மை 1-800-387-0750 எனும் எண்ணில் அழைத்து, உங்கள் கோரிக்கை பற்றி நன்கு அறிந்த வாடிக்கையாளர் சேவைப் பிரதிநிதி ஒருவருடன் கதைக்கலாம். சிறந்த சேவையை நாம் உங்களுக்கு வழங்க உதவுவதற்கு இயலுமான பொழுதில், தயவுசெய்து உங்கள் கோரிக்கை எண்ணை உங்களுடன் வைத்திருக்கவும்.

**நியாயமான நடைமுறைகள் ஆணைக்குழு** என்பது WSIB க்கான தீர்ப்பாய நிறுவனமாகும். WSIB யிடமிருந்து பெற்றுக்கொள்ளும் சேவை அல்லது சிகிச்சையின் நேர்மைத் தன்மை பற்றிக் கரிசனைகள் கொண்டிருக்கும் காயமடைந்த தொழிலாளர்கள், தொழில் வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குனர்கள் ஆகியோருக்கு ஒரு சுயாதீனமான, நடுநிலையான மற்றும் நம்பகமான சேவையை இந்த ஆணைக்குழு வழங்குகின்றது.

மேலதிக விபரங்களுக்கு:
**www.fairpractices.on.ca**
தொலைபேசி: **416-603-3010**
Toll-free: **1-866-258-4383**

**தொழிலாளர் ஆலோசக அலுவலகம்** (OWA) என்பது, ஒன்ராரியோ தொழிலாளர் அமைச்சரவையின் சுயாதீனமான ஒரு நிறுவனமாகும், இது தொழிற்சங்க-உறுப்பினர் அல்லாத தொழிலாளருக்கும் அவர்களில் சார்ந்திருந்து பாதிப்புக்குப் பின்னர் தொடர்ந்து வாழ்பவருக்கும் பணியிடக் காப்புறுதிச் சேவைகளை வழங்குகின்றது.

மேலதிக விபரங்களுக்கு::
**www.owa.gov.on.ca**
தொலைபேசி: **1-800-435-8980** (ஆங்கிலம்)
1-800-661-6365 (பிரெஞ்சு)

பின்வரும் ஆதாரங்கள் **www.wsib.on.ca/yourguide** எனும் எமது இணையத்தளத்தில் கிடைக்கின்றன. மேலும் இந்த ஆவணத்தை வாசித்தபின் உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க இது உதவக்கூடும்.

**கோரிக்கைகளின் செயன்முறை**

- eLearning பாடநெறி: வேலை-தொடர்பான காயம் அல்லது நோய் ஒன்று ஏற்படும் போது
- படிவம் 6: பணியாளர்களுக்கான குறிப்பு வழிகாட்டி (PDF)
- செயற்பாட்டுத் திறன்கள் படிவம் (PDF)

**அனுகூலங்கள் மற்றும் சேவைகள்**

- eLearning பாடநெறி: அனுகூலங்கள்
- eLearning பாடநெறி: பணிக்கு மீண்டும் திரும்புதல்
- பணிக்கு-மீண்டும்-திரும்பும் திட்ட மாதிரிப் படிவம் (PDF)
- நியாயமான நடைமுறைகள் ஆணைக்குழு: புகார் கையேடு (PDF)

**தீர்மானங்கள்**

- WSIB யின் செயற்பாட்டுக் கொள்கைக் கையேடு (PDF)
- WSIB யின் முடிவை மேன்முறையீடு செய்வதற்கான பணியாளர் அறிவுறுத்தல்கள் (PDF)
- eLearning பாடநெறி: ஒரு தீர்ப்புக் குறித்து கேள்வி கேட்டல்